09.02.2026

அ.வ.எண். 137/2017

வா.சா.1- திருமதி. ஜானகி (எ) கண்ணம்மாள், க/பெ.பழனிச்சாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 09.02.2026 is accordance with the provision of Act X of 3331

**16 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கருப்ப கவுண்டர் மகன் சுப்பன்ன கவுண்டர் என்றால் சரிதான். சுப்பன்ன கவுண்டர் மகன் கணபதி கவுண்டர் ஆவார். கணபதி கவுண்டரின் மனைவி பெயர் வள்ளியம்மாள் ஆவார். சுப்பன்ன கவுண்டர் இறப்பதற்கு முன்பாகவே கணபதி கவுண்டர் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். கணபதி கவுண்டரின் மகன் 4 ம் பிரதிவாதி பொன்னுச்சாமி என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதி பொன்னுச்சாமியின் மகன் செல்வராஜ்(16 ம் பிரதிவாதி) என்றால் சரிதான்.1934 ம் ஆண்டு சுப்பன்ன கவுண்டரும், கணபதி கவுண்டரும், வசுந்துரா வங்கியில் தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் பெற்றார்கள் என்றால் தெரியாது.

2. 1950 ம் ஆண்டில், சுப்பன்ன கவுண்டரும், கணபதி கவுண்டரும் பாகம் செய்து கொண்டனர் என்றால் ஆமாம். அவ்வாறு பாகப்பிரிவினை செய்து கொண்ட சொத்துக்களை அவரவர் அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரிதான். கணபதி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை கணபதி கவுண்டரும், அவரது மகன் பொன்னுச்சாமி (4 ம் பிரதிவாதி) அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரிதான். எனக்கு, திருமணம் ஆகி 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. திருமணம் ஆன பின்னிட்டு, நான் எனது கணவரின் வீட்டிற்கு சென்றுவிட்டேன். என்னுடைய உடன்பிறந்த சகோதரிகளுக்கும் திருமணம் ஆகி அவர்கள், அவர்களது கணவர் வீட்டுக்கு சென்றுவிட்டனர். பின்னிட்டு, 4 ம் பிரதிவாதி பொன்னுச்சாமி சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் எங்களுக்கு தெரியாமல் அம்மாவும், பொன்னுச்சாமியும் சொத்தை விற்பனை செய்துவிட்டனர்.

3. 1ம் பிரதிவாதி, ஈஸ்வரி, கோவை 4 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால்

ஆமாம். அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் தெரியாது. வழக்கு சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றால் என்னுடைய சகோதரிகள் விதைத்து கொண்டு உள்ளார்கள். தாவா சொத்து செல்வராஜ் (16 ம் பிரதிவாதி)க்கு சொந்தமானது என்றால் அத்தைகள் அனைவருக்கும் சொந்தமானது. பல ஆண்டுகள் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் காலவரையறை சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானும், என் சகோதரிகளும் அனுபவத்தில் இல்லை என்றால் அவர்கள் இறந்துவிட்டனர், வாரிசுகள் உள்ளனர். நான் பொய்யான சங்கதிகளை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur